


**11. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

- சென்னை ஐஐடி-யுடன் மொரிசியஸ் நாட்டின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் ஆராய்ச்சியும், கல்வியும் புதிய உச்சங்களை எட்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- முப்படை பெண் அதிகாரிகளின் 9 மாத கடல்வழி கப்பல் பயணத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் மும்பையில் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.
- தமிழகம் இன்னும் ஆறாண்டுகளில் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்டும் என முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- எழுச்சிமிக்க பாடல்கள் மூலம் இளைஞர்களை சுதந்திர போராட்டங்களில் ஈடுபட செய்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவை போற்றுவோம் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.
- ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரான்கி ரெட்டி, சிராக்செட்டி இணை முன்னேறியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

**பிரதமர்**

இந்தியா - மொரிசியஸ் நட்புறவின் முக்கிய தூணாக எரிசக்தி பாதுகாப்பு திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன் சந்திர ராம்கூலத்துடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பிரதமர், நம் நாட்டின்

அறிவியல் தொழில்நுட்ப இயக்குனரகம் மொரிசியஸில் விரைவில் ஏற்படுத்தப்படும் என்றார்.

இருநாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக கூறிய பிரதமர், சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும், இந்திய தோட்டக்கலை மேலாண்மை நிறுவனங்களுடன் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தால் ஆராய்ச்சி, கல்வி, படைப்பாற்றல் திறன் உள்ளிட்டவை புதிய உச்சங்களை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நீர்வரைவியல் துறையில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் இதன்மூலம் பரஸ்பர கடல்சார் கண்காணிப்பு, நீர்வரைவியல் சார்ந்த தரவுகள் ஆய்வு செய்யப்படும் என்றார்.

**********

ராஜ்நாத்சிங்

இந்திய கடற்படை கப்பலான திரிவேணியில் முதல்முறையாக முப்படைகளை சேர்ந்த பெண் அதிகாரிகள் மேற்கொள்ள உள்ள 9 மாத கடல் பயணத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று மும்பையில் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

ராணுவம், விமானப்படை, கடற்படையை சேர்ந்த 10 பெண் அதிகாரிகள் **மும்பை கேட் வே ஆ.்.ப் இந்தியாவில்**, **சாமுத்ரி பிரதிக்ஷ்னா** என்று பெயரிடப்பட்ட இந்த துணிச்சல்மிகு பயணத்தை இன்று தொடங்கியுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு.ராஜ்நாத்சிங் இந்தியாவின் படைத்திறன் முன்னேற்றத்திற்கு இப்பயணம் ஒரு சான்றாக திகழ்கிறது என்று பெருமிதம் தெரிவித்தார்.

இப்பயணம் முப்படைகளின் ஒருங்கிணைந்த வலுவையும், உணர்வையும் புலப்படுத்துவதாக கூறிய அமைச்சர், இக்கடினமான பயணம் ராணுவ வீராங்கனைகளின் கட்டுபாட்டையும், தன்னம்பிக்கையும் பிரதிபலிப்பதாக குறிப்பிட்டார்.

இந்த பயணத்தை முடித்துக்கொண்டு இக்குழுவினர் நாடு திரும்பும்போது, வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகவும், பொன்எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய அத்யாயமாகவும் இருக்கும் என்று கூறினார்.

இக்குழுவினர் தங்களது கடற்பயணத்தின்போது சந்திக்க இருக்கும் சவால்களை எடுத்துரைத்த அமைச்சர், எவ்வித சவால்களையும் எதிர்கொண்டு இலக்கை எட்டுவதற்கான மன வலிமையை இக்குழுவினர் இதன்மூலம் பெறுவார்கள் என்றார்.

இந்தியாவின் கடல் சார் திறன்களுக்கு எடுத்துக்காட்டாக இது அமைவதோடு, நான்கு நாடுகளின் துறைமுகங்களுக்கு இந்த கப்பல் பயணிக்க இருப்பதன் மூலம் அங்குள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் உள்ளிட்டோருடன் கலந்துரையாட ஒரு வாய்ப்பு உருவாகியுள்ளதாக திரு.ராஜ்நாத்சிங் கூறினார்.

முப்படை தலைவர் ஜென்ரல் அனில் சவ்ஹான் ராணுவம், விமானம், கடற்படை தலைவர்கள் இந்நிகழ்வில் காணொலி மூலம் பங்கேற்றனர்.

இந்த 9 மாத கடல் வழி பயணத்தில் திரிவேணி கப்பலில் செல்லும் இக்குழுவினர் 26 ஆயிரம் கடல் மைல் தொலைவிற்கு பயணித்து இருமுறை பூமத்திய ரேகையை கடந்து நான்கு கடல் முனைகளை சுற்றி வர உள்ளனர்.

உலகின் முக்கியமான கடல் பகுதிகளையும், ஆபத்தான தண்ணீரையும் கடந்து பயணம் மேற்கொள்ளும் இக்குழுவினர் அடுத்த ஆண்டு மே மாதம் நாடு திரும்புகின்றனர்.

**********

பியூஷ்கோயல்

இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமான சூழலில் முன்னெடுத்துச்செல்லப்படுவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

பட்னாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தி வெளியிட்டார்.

சாலை மற்றும் ரயில் கட்டமைப்பு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த நிலையில் பீகாரின் வளர்ச்சி மேம்படும் என்றார்.

**********

முதலமைச்சர்

தமிழகம் வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்டும் என முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஓசூரில் முதலீட்டாளர்கள் மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், தொழில் வளர்ச்சியில் தனி அடையாளம் பெற்ற நகரமாக ஓசூர் திகழ்கிறது என்றார்.

தமது ஜெர்மனி இங்கிலாந்து பயணத்தின் மூலம் 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடுகள் தமிழகத்திற்கு ஈர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளதாக குறிப்பிட்ட அவர், முதலீட்டாளர்களுக்கு உகந்த மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் கூறினார்.

ஒசூர் மாவட்டத்தில் ஐந்தரை லட்சம் சதுர அடியில் பிரம்மாண்ட டைடல் பூங்கா அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

**வாய்ஸ்**

இந்நிகழ்ச்சியில் 24 ஆயிரத்து 307 கோடி ரூபாய் முதலீட்டில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இதன்மூலம் 49 ஆயிரத்து 353 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது..

இந்நிகழ்வின் ஒருபகுதியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு தொழிற்சாலை மற்றும் பணியாளர் தங்குமிடங்களை திறந்துவைத்த முதலமைச்சர், ஆயிரத்து 100 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய பணிகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

**********

**பாரதியார் நினைவு தினம்**

மகாகவி பாரதியாரின் 104ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

தமிழக அரசின் சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள பாரதியாரின் திருவுருவ சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதீத தேசப்பற்று கொண்டிருந்த மகா கவி சுப்பிரமணிய பாரதியார் மக்களை ஒன்றிணைக்கும் வகையில் கருத்துக்களை முன்னிறுத்தியதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

அவரது எழுச்சிமிக்க பாடல்கள் மூலம் இளைஞர்களை சுதந்திர போராட்டங்களில் ஈடுபட செய்ததோடு தமது எழுத்துக்கள் மூலமாகவும், இதழ்கள் வாயிலாகவும், நம் நினைவில் வாழும் பாரதியாரின் நினைவை போற்றுவோம் என அமைச்சர் கூறியுள்ளார்.

**பாரதியாரின் சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம்** எட்டயபுரத்தில் அவரது இல்லத்தில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு தமிழ் அறிஞர்கள் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்..

**நெல்லை சந்திப்பில் உள்ள பாரதியாரின் திருவுருவ** சிலைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திருமதி. பிருந்தா காரத் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**********

**சிவசங்கர்**

தமிழ்நாட்டில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக 11 ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் புதிய புறநகர் பேருந்து மற்றும் குளிர்சாதன பேருந்து சேவைகளை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், முதற்கட்டமாக 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் இயக்கப்படுவதாக கூறினார்.

**********

**அன்புமணி ராமதாஸ்**

பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் நீக்கப்பட்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் இதனை அறிவித்த கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும், நிர்வாக தலைவர் பதவியிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுவதாக தெரிவித்தார்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் டாக்டர் அன்புமணி ஈடுபட்டதாகவும், இதுகுறித்து கட்சி தலைமை கோரிய விளக்கங்களுக்கு அவர் பதில் அளிக்காததாலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

முன்னதாக கட்சியின் நிர்வாக குழுவையும் கலைத்து அவர் உத்தரவு பிறப்பித்தார்.

டாக்டர் அன்புமணி பட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் அணி தலைவராகவும், நிர்வாக குழுவின் தலைவராகவும், பணியாற்றியதோடு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சியில் இரு முறை மத்திய அமைச்சராக பதவி வகித்தார்.

1989-ஆம் ஆண்டு ஜுலை 16ஆம் தேதி பாட்டாளி மக்கள் கட்சியை டாக்டர் எஸ்.ராமதாஸ் தோற்றுவித்தது குறிப்பிடத்தக்கது.

**********

முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணையில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய துணை கண்காணிப்பு குழு இன்று ஆய்வு மேற்கொண்டுள்ளது.

இந்த ஆணையத்தின் இயக்குனர் திரு.கிரிதர் தலைமையில் பிரதான அணை, பேபி அணை, மதகு மற்றும் சுரங்க பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இக்குழுவின் அறிக்கை, அணை பாதுகாப்பு ஆணைய தலைவரிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

**********

**தூத்துக்குடி வாய்ஸ்**

தூத்துக்குடி மாவட்டத்தில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் குறித்த விழிப்புணர்வு ஓவியம் வரைதல் நிகழ்வை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அனுஷியா இன்று துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்களின் உரிமைகளை பாதுகாக்க மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

**வாய்ஸ்**

**********

**பேட்மிட்டன்**

ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரான்கி ரெட்டி, சிராக்செட்டி இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை – தாய்லாந்து இணையை 18-21 21-15 21-11 என்ற செட்களில் வென்றது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

**********

**ஹாக்கி**

சீன ஹாங்சூவில் நடைபெறும் 11-வது ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**